DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

--

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

வழக்கு எண்.	SC No.181/2022	அரசுத்தரப்பு	P.W.5
பெயர்	தயாளன்	கிராமம்	
தந்தை / கணவர் பெயர்	தர்மராஜ்	வட்டம்	
வயது		மாவட்டம்	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.06.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் திருகோகர்ணம் கம்மாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். வீரைய்யா மகன் சின்னதம்பியை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் முன்னிலையில் போலிசார் வாகனம் எதையும் கைப்பற்றவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.6.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 16.08.2021 தேதி மாலை 4.15 மணி அளவில் நானும் திருகோகர்ணம் மாரியம்மன் கோவிலை சேர்ந்த வீரைய்யா மகன் சின்னதம்பி என்பவரும் தெரிந்த நபரை பார்த்துவிட்டு கம்மாளர் தெரு நேரு நகர் குண்டுபோடும் பாறை அருகே உள்ள VD தாமரை கிரஷர் வழியாக நடந்து வந்து கொண்டிருந்தபோது திருகோ கர்ண காவல் ஆய்வாளர் விஜய் என்கிற கோழிவிஜய் என்பவரை விசாரித்து கொண்டிருந்தபோது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் விஜய் என்கிற கோழிவிஜய் பீர்பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி குடிபோதையில் இரண்டு மூன்று இடங்களில் திரியை பற்ற வைத்து பெட்ரோல் குண்டு வீசியதாகவும், அது வெடித்து சிதறியதாகவும், இந்த வழக்கு சம்பவமான சம்பவ இடத்தில் குன்னவயல் போய் ஒரு வீட்டின் முன்பு வண்டியை நிறுத்திவிட்டு பீர்பாட்டில் தீ வைத்து அதை சின்னதம்பி வீசியதாகவும், கம்மாளர் தெரு சென்று சின்னமணி வீட்டில் பிரச்சனை செய்தவர்களை கருப்பசாமி தீ வைத்து கொடுத்த ஒரு பிராந்தி பாட்டிலை விஜய் என்கிற கோழி விஜய் தூக்கி எறிந்ததாகவும், அதற்கு பிறகு சுடுகாட்டுககு மேலே உள்ள பாறை மேல் படுத்துவிட்டு வீட்டிற்கு சென்று

விட்டதாகவும், 16.08.2021 தேதியில் மாலை 4.00 மணி அளவில் போலிசார் பிடித்து கொண்டதை கூறி எங்கள் இருவர் முன்னிலையிலும் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 4.15 முதல் 5.15 வரை ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அதில் நானும் சின்னதம்பியும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் மேலும் எங்கள் முன்பாக விஜய் என்கிற கோழிவிஜய் எடுத்து ஆஜர் செய்த TN 68 L6137 splender plus இரு சக்கர வாகனத்தையும் கருப்பு ஊதா கட்டம் போட்ட சட்டைத் துணி ஒன்றையும் , மாலை 5.15 முதல் 5.45 வரை மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக தான் கைப்பற்றுதல் மகஜரில் நானும் சின்னதம்பியும் கையெழுத்து செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு எதிரியை காப்பாற்றவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– தயாளன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.